# வாரியபொல பிரதேச சபை

# குருநாகல் மாவட்டம்

-----------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

-----------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 31 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மார்ச் 28 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 நவம்பர் 28 திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

-------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடபட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வாரியபொல பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகள் காசோட்டம் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-----------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

--------------------------------------------

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டுக் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் கடன் தொர்பாக மீளாய்வாண்டு இறுதி காலாண்டிற்கான செலுத்த வேண்டிய கடன் தவணை ஆகிய ரூபா 401,593 தொகைக்காக கடன் கொடுத்தோர்கள் கீழ் ஏற்பாடுகள் மேற்கொண்டிருக்கவில்லை. அதே போல் அதற்காக செலுத்த வேண்டிய வட்டி ரூபா 227,792 தொகை எனினும், கடன் கொடுத்தோரின் கீழ் ரூபா 220,107 தொகை மாத்திரம் ஒதுக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக வருட இறுதியில் உள்ளவாறு கடன்கொடுத்தோர் மீதி ரூபா 409,278 இனால் குறைவாகவும் ஆண்டிற்கான வட்டி செலவு ரூபா 7,685 இனால் குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) ஆண்டிற்கான உற்பத்திச் செலவு ரூபா 8,403,770 உடன் உற்பத்தி செய்யப்பட்ட அச்சுக் கற்களின் எண்ணிக்கை 397988 இனை கவனத்தில் எடுக்கும் போது மீளாய்வாண்டு தொடர்பாக, அச்சுக்கல் ஒன்றின் உற்பத்திக் கிரயம் ரூபா 21.11 ஆக காணப்பட வேண்டும் எனினும், அதனை ரூபா 24.97 என முடிவுற்ற பொருடகளின் பெறுமதி கணித்துள்ளமையால் வருட இறுதியில் உள்ளவாறு முடிவுப் பொருட்கள் இருப்பு ரூபா 216,588 மிகையாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெறவேண்டிய ஒரே முறையில் கிடைக்க வேண்டிய பண நிலுவை ரூபா 8,657,810 தொகை எனினும் அவை கணக்குகளில் ரூபா 7,017,650 என ரூபா 1,640,160 இனால் குறைவாக எடுக்கப்பட்டிருந்தது.

1.3.2 எதிர்பாராத பொறுப்புக்கள்

-----------------------------------------

பிரதேச சபையில் கடமையாற்றி ஓய்வு பெற்றுள்ள உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்புத் தொகை செலுத்த வேண்டிய ஊழியர்கள் தொடர்பாக சபையினால் ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்தப்பட வேண்டிய பங்களிப்புத் தொகை முறைப்படி செலுத்தப்படாமையால் மீளாய்வாண்டு இறுதி வரை அந் நிதியத்திற்கு செலுத்த வேண்டிய மீதி ரூபா 3,023,766 ஆக காணப்பட்டது.

1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டு தொடர்பாக பெறுவனவுகள் மற்றும் ஆரம்ப மீதிகளின் கீழ் 10 கணக்கு விடயங்கள் தொடர்பாக கணக்குகளின் பிரகாரம் மற்றும் நேரொத்த பெறுமதியிடையே ரூபா 362,150 இற்கான இணக்கமின்மைகள் காணப்பட்டது.

1.3.4 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாற பெறவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 108,394,442 ஆக காணப்பட்டதுடன் அவற்றில் ரூபா 25,000,000 தொகை 2010 ஆண்டு தொடர்பாக பெறவேண்டிய முத்திரை கட்டணமாகும்.

(ஆ) 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டியிருந்த கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 48,527,406 ஆக காணப்பட்டதுடன் அவற்றில் ரூபா 6,031,346 தொகை 3 வருடங்களை விட பழமையானவையாகும்.

1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

-----------------------------------------------------------------

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 29,703,228 இற்கான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக விரிவாக பரிசோதனை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது.

2 நிதி மீளாய்வு

---------------------

2.1 நிதி விளைவுகள்

---------------------------

சமர்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் செயற்பாட்டு மிகை ரூபா 8,381,390 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் செயற்பாட்டு மிகை ரூபா 14,226,467 ஆக காணப்பட்டமையால் செயற்பாட்டு விளைவுகளில் ரூபா 5,845,077 இற்கான வீழ்ச்சி ஒன்று காணப்பட்டது. இந்த நிதி

விளைவிற்கு ரூபா 46,166,397 இற்கான மூலதன உதவி மற்றும் ரூபா 54,531,526 இற்கான மூலதன செலவுகளை சீராக்கல் மேற்கொண்ட போது மீளாய்வாண்டிற்கான மிகை ரூபா 16,261 வரை குறைந்துள்ளது.

2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

---------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற் கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கான சபையின் மீண்டுவரும் வருமானம் ஆகிய ரூபா 91,186,312 இல் நூற்றிற்கு 76 ஆகிய ரூபா 69,562,211 உருவாக்கிய வருமானம் அல்லாத நீதி மன்றத் தண்டப் பணம் முத்திரை கட்டணம் சம்பள மீளளிப்புக்கள் ஆகிய படிகள் தன்மையுள்ள பெறுவனவுகள் அடங்கியுள்ளது. அதே போல் மூலதன வருமானமாகிய ரூபா 46,166,397 இன் நூற்றிற்கு 87 என ரூபா 40,186,844 தொகை ஒன்று கமநெகும, மகநெகும போன்ற மூலங்களின் மீது வேறு நிறுவனங்கள் மூலம் அதிகார பிரதேசத்தில் அபிவிருத்தி விடயங்களுக்காக கிடைத்த பணம் அடங்குகின்றது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான மொத்த மீண்டுவரும் செலவாகிய ரூபா 91,186,312 இல் நூற்றிற்கு 49 ஆகிய ரூபா 45,173,675 தனிப்பட்ட சம்பள செலவு ஆக காணப்பட்டதுடன் அவற்றில் நூற்றிற்கு 73 ஆக ரூபா 33,058,896 இற்கான சம்பள மீளளிப்பு என உள்ளூராட்சி ஆணையாளரிடம் கிடைத்து வேறு வருமானங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. மூலதன செலவாகிய ரூபா 41,211,624 இல் நூற்றிற்கு 16 ஆகிய ரூபா 6,740,697 தொகை சபை நிதியத்தில் இருந்து செலவிடப்பட்டிருந்தது. அத்துடன் மீதியின் ரூபா தொகை மாத்திரம் நூற்றிற்கு 84 ஆகிய ரூபா 34,470,927 மீதித் தொகை மகநெகும, கமநெகும போன்ற மூலங்கள் மீது வேறு நிறுவனங்களின் ஏற்பாடுகளின் மூலம் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி வேலைகளாகும்.

2.3 வருமான நிருவாகம்

--------------------------------

2.3.1 வருமான சேகரித்தலின் செயலாற்றுகை

----------------------------------------------------------------

வியாபார அனுமதிப்பத்திரம், வர்த்தக வரி, கடை வாடகை, வாடகை போன்ற வருமானங்கள் வெளிக்களத்தில் சேகரிப்பதற்காக குறிப்பிட்ட அதிகாரம் ஒன்று வழங்கப்பட்டிருக்கவில்லை எனினும், சபையின் வருமானம் சேகரிப்பாளரினால் வருடம் பூராகவும் வீதவரி மற்றும் வியாபார அனுமதிப் பத்திரம் கடைவாடகை மற்றும் வர்த்தக வரி போன்ற வருமானங்கள் வெளிக்களத்திலேயே சேகரிக்கப்பட்டிருந்தது.

2.3.2 வீதவரி

-----------

1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாகம்) விதி 32 – 42 வரையான விதிகளின் பிரகாரம் காலாண்டுகளின் அடிப்படையில் நிலுவை பட்டியல் தயாரித்தல் குறிப்பிட்ட அறிவித்தல் வழங்கிய பின்னர் ஆதனங்களை தடை செய்து வீதவரி அறவீடு செய்யும் நடைமுறையினை

அமுல் நடத்த வேண்டும். எனினும் 2013 திசெம்பர் 31 இறுதிக் காலாண்டில் 6 வீதிகளில் 29 அலகுகளுக்காக ரூபா 53,495 தொகைக்காக மாத்திரம் நிலுவை பட்டியல் தயாரிக்கப்பட்டு எழுத்தாணை வழங்கப்பட்டிருந்ததுடன், அவற்றில் 16 அலகுகளில் இருந்து ரூபா 27,280 மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. அதே போல் கடுப்பொத்த வட்டாரத்தில் 18 சந்தர்ப்பங்களில் தொடர்பாக நீண்ட காலமாக காணப்படும் ரூபா 62,210 இற்கான நிலுவை ஒன்று காணப்பட்டது.

2.3.3 கடை வாடகை

-----------------------

(அ) 2008 ஆண்டின் போது ரூபா 805,000 இற்கான கேள்வி நடைமுறை மூலம் வழங்கியிருந்த பஸ் நிலைய மேல் மாடியில் 10 ஆம் இலக்க கடை தொடர்பாக 2014 ஜனவரி 28 வரை ரூபா 150,000 நிலுவை ஒன்று காணப்பட்டது.

(ஆ) சிறு அளவிலான வர்த்தக தொடர் கட்டடத்தில் முதல் மாடியில் 14 கடைகள் 2011 ஜனவரி 22 திகதி ஒரே முறையில் பணம் செலுத்தும் அடிப்படையில் ரூபா 8,307,810 பெறுமதிக்கு வழங்கப்பட்டிருந்தது. அத்துடன் பணம் செலுத்தும் நிபந்தனையின் படி பணத்தினை 2011 ஆகஸ்ட் 15 திகதிக்கு முன்னர் செலுத்த வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும், கணக்காய்வு சந்தர்ப்பமாகிய 2014 ஜனவரி மாதம் வரை ரூபா 7,757,810 தொகை ஒன்று நிலுவையாக காணப்பட்டதுடன் கடைகளின் நிர்மாண வேலையும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

3 செயற்பாட்டு மீளாய்வு

---------------------------------

3.1 செயலாற்றுகை மதிப்பீடு

--------------------------------------

சபையினால் மீளாய்வாண்டின் போது மேற்கொள்வதற்கு திட்டமிட்டிருந்த ரூபா 450,000 பெறுமதியான 04 நலன்புரி விடயங்கள் முற்றாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அத்துடன் ரூபா 23,266,000 பெறுமதியின் 04 நலன்புரி விடயங்கள் நூற்றிற்கு 15 ற்கும் நூற்றிற்கு 70 ற்கும் இடையே சதவீதம் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதே போல் சபையினால் மீளாய்வாண்டின் போது மேற்கொள்வதற்கு திட்டமிட்டிருந்த ரூபா 4,300,000 பெறுமதியான 5 மூலதன விடயங்கள் முற்றாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அத்துடன் ரூபா 35,100,000 பெறுமதியான 6 மூலதன விடயங்கள் நூற்றிற்கு 08 உம் மற்றும் நூற்றிற்கு 27 உம் இடையே சதவீதத்தில் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

3.2 முகாமைத்துவ திறமையின்மைகள்

-------------------------------------------------------

சபையினால் 2008 – 2011 காலப்பகுதிகள் அங்கீகரிக்கப்பட்டிருந்த 697 கட்டட அனுமதிப்பத்திரங்களில் 48 மாத்திரமே இணக்கச் சான்றுகள் பெற்றிருந்தது. 649 விண்ணப்பங்களுக்காக இணக்கச் சான்றிதழ் பெற்றிருக்கான அல்லது கட்டட அனுமதிப்பத்திரத்தின் காலம் நீடிப்பதற்காக பற்றி சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. இக் கட்டடங்கள் அனைத்தும் நிர்மாணிக்கப்பட்டிருந்தால் சபையின் துணை விதிகளின் பிரகாரம் ரூபா 649,000 இற்கு கட்டட இணக்கச் சான்றிதழ் வருமானமும் குறிப்பிட்ட கட்டட நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்படாவிடின் அனுமதிப்பத்திர காலத்தை வருடாந்த கால நீடித்தல் கட்டணம் ரூபா 195,400 இற்கான வருமானம் சபைக்கு உழைக்கக் கூடியதாக இருந்தது.

3.3 செயற்திட்டங்கள் அமுல் நடத்துதல்

-----------------------------------------------------------

உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான விஷேட செயற்திட்டங்கள் அமுல் நடத்துதலின் கீழ் வடமேல் மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தினால் பசு மாடு செயற்திட்டத்திற்காக ரூபா 2010 பெப்ரவரி 10 திகதி ரூபா 500,000 வாரியபொல பிரதேச சபைக்கு வழங்கப்பட்டிருந்துடன் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு செயற்திட்ட உதவி நிதியில் இருந்து ரூபா 218,000 தொகை குறிப்பிட்ட விடயத்திற்கு பயன்படுத்தப்படாமல் செயற்படாது காணப்பட்டது.

4 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

-----------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) நிதிக் கட்டுப்பாடு

(ஈ) வருமான நிருவாகம்

(உ) சொத்துக்கள் முகாமைத்துவம்